**கவனிக்க.**- 2020.01.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2162 - 2020 පෙබරවාරි මස 07 වැනි සිකුරාදා - 2020.02.07

*2162 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | 688 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 693 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2020 சனவரி 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

687 - B82006 - 5,403 (2020/2)

# பதவிகள் - வெற்றிடம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் சுகாதாரத் திணைக்களத்தில் நிறைவேற்றுத்தர சேவை வகையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – 2020 (திறந்த)**

மேல் மாகாண அரசாங்க சேவையில் சுகாதாரத் திணைக்களத்தில் நிறைவேற்றுத்தர சேவை வகையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவியில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகுதிகளையுடைய மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பள அளவுத் திட்டம் :**

சம்பளத்திட்டம் SL - 1 – 2016 ஆவதுடன் இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு அ.நி.சு.நி. 03/2016 இற்கேற்ப ரூபா. 47,615 – 10 X 1335 – 8 X 1630 – 12 X 2170 – 110,895/- ஆகும். (01 ஆம் சம்பளப்படிநிலை).

**03. சேவை நிபந்தனைகள் :**

I. இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியக் கொடுப்பனவுடையது மாடும் உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

II. இப்பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையோர் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டு இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.

III. பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மற்றும் பதவியுயர்த்தும் நடைமுறையில் காட்டப்பட்டுள்ளபடி வினைத்திறன் தடை தாண்டல் மற்றும் அரசகரும மொழித் தேர்ச்சி பரீட்சைகளில் சித்தியெய்தல் அவசியம்.

IV. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது தாபனக் கோவைக்கும், மேல் மாகாண அரசாங்க சேவையின் செயற் படிமுறை விதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண சபையினது நிதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண ஆளுநரினால் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் வேறு ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகளுக்கும், அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படல் வேண்டும்.

**04. வெற்றிடங்கள் நிலவும் துறைகள் :**

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவியில் 01 வெற்றிடம் நிலவுகிறது. இப்பதவியின் வெற்றிடத்திற்காக இணைத்துக் கொள்ளல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமே உள்ளது.

4.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.03.06 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் 2020.03.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்.

**05. தகுதிகள் :**

**5.1 கல்வித் தகைமைகள் -**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இலத்திரனியல்/ மின்/ இயந்திரப் பொறியியல்/ உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

**5.2 அனுபவம் -**

அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில், நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது தனியார் துறையில் உயிரியல் மருத்துவ பொறியியலாளராக, மருத்துவ பொறியியலாளராக அல்லது மருத்துவ விஞ்ஞானியாக கடமையாற்றியிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**5.3 உடற் தகுதிகள் -**

எல்லா விண்ணப்பதாரிகளும் மேல் மாகாணத்தினுள் எப்பிரதேசத்திலாயினும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.

**5.4 வேறு தகுதிகள் -**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்.

III. இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகுதிகளையும் 2020.03.06 ஆம் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் அவசியம்.

**06. வயதெல்லை :**

ஆகக்குறைந்தது 21 வருடங்கள்

ஆகக்கூடியது 35 வருடங்கள்

**07. ஆட்சேர்ப்பு முறை :**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை வரிசைப்படி நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**பொதுவான நேர்முகத்தேர்வு** - பொதுவான நேர்முகத்தேர்வில் அடிப்படைத்தகைமைகளைப் பரிசீலித்தல் மாத்திரம் நடைபெறும். புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு** - கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை வரிசைப்படி நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

| *பரிசீலித்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|
| **i. மேலதிக பட்டப்பின் கல்வித்தகைமைகள்**<br>a. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இலத்திரனியல்/ மின்/ இயந்திரப் பொறியியல்/ உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான பட்டபின் டிப்ளோமாவொன்றினைப் பெற்றிருத்தல். -15<br>b. மருத்துவ பொறியியல் விஞ்ஞானம்/ மருத்துவ இலத்திரனியல் விஞ்ஞானம்/ மருத்துவத் தொழினுட்ப முகாமைத்துவம்/ மருத்துவ பௌதீக விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவொன்றினைப் பெற்றிருத்தல். -15 | 30 |
| **ii. அனுபவம்**<br>அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில், நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது தனியார் துறையில் உயிரியல் மருத்துவ பொறியியலாளராக, மருத்துவ பொறியியலாளராக அல்லது மருத்துவ விஞ்ஞானியாக கடமையாற்றிய ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 08 வருடங்களுக்கு | 40 |
| **iii. துறைசார் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்**<br>துறைசார் (இலத்திரனியல்/ மின்/ இயந்திரப் பொறியியல்/ உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பாக) வெளியிடப்பட்ட (நூல் வெளியீட்டுச்சபையில் இலக்கமொன்றைப் பெற்றுக்கொண்ட/ அங்கீகரிக்கப்பட்ட இதழொன்றில் வெளியிடப்பட்ட (பிரதான எழுத்தாளராக) ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் ஒன்றிற்கு 05 வீதம் (ஆகக்கூடியது 25 புள்ளிகள்) | 25 |
| **iv.**நேர்முகத்தேர்வில் வெளிக்காட்டும் திறமை | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

**08. விண்ணப்பிக்கும் முறை :**

i. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 03 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 04 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். உரிய மாதிரியுடன் பொருந்தாத, உரிய திகதிக்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத பூர்த்தியற்ற நிலையிலுள்ள விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

ii. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020.03.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு, இலக்கம் 628, 10ஆவது மாடி, ஜனஜய சிட்டி கட்டிடம், நாவல வீதி, இராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண அரசாங்க சேவையில் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் – 2020 (திறந்த)" என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. குறிப்பிடப்பட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் மற்றும் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

iii. விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், (ரூ. 498,960.00) அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர்),பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, வேறு மதத்தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது கருதத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் மதகுரு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஆகியோரில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும்.

**09. விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றும்போது நேர்முகத் தேர்வுச்சபை திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வருவனவற்றிலொன்றை சமர்ப்பிக்கலாம்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை.

II. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**10. தவறான தகவல்களை சமர்ப்பித்தல் :**

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின், பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு. இது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை செயற்படிமுறை ஒழுங்கு விதிக்கோவையின் 47 ஆவது பிரிவின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11.** இந் நேர்முகத் தேர்வில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பட்டியல் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் www.psc.wp.gov.lk எனும் இணையத்தில் வெளியிடப்படும்.

**12.** இவ்விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/ உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

**13.** அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட்டு, இவ்வறிவித்தலுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என கருதப்பட்டு நேர்முகத்தேர்விற்குத் தோற்றுவதற்கு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் நேர்முகத்தேர்விற்கான கடிதம் தொலைதல் அல்லது கால தாமதமாதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. விண்ணப்பதாரியொருவரை நேர்முகத்தேர்விற்காக அழைத்தல் அவர் இப்பதவிக்கான தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்படாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் தேர்வொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**14.** இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**15.** இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

திலக் செனரத்,
செயலாளர்.

மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு,
மேல் மாகாணம்.
2020, சனவரி 27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் சுகாதாரத் திணைக்களத்தில் நிறைவேற்றுத்தர சேவை வகையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – 2020 (திறந்த)**

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (பொருத்தமான எழுத்தினை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - S

தமிழ் - T

ஆங்கிலம் - E

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................................

1.3 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ........................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..................................................................................

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :.........................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :.........................................................................................

2.3 நேர்முகத்தேர்விற்கான கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி :...........................................................................
.......................................................................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : ..............................................................................................................

03. 3.1 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர் – ஆம் / இல்லை

3.2 விண்ணப்ப முடிவுத் திகதியான 2020.03.06 இல் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் :

வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

3.3 பிறந்த திகதி - ஆண்டு : [ | | | ] மாதம்: [ | ] திகதி : [ | ]

3.4 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது : வருடங்கள் : [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

3.5 பால் – (பொருத்தமான கூட்டில் "√" குறியினை இடவும்)

ஆண் - [ ] பெண்— [ ]

04. தகைமைகள்: (அறிவித்தலின் 05 இற்கமைவாக தகைமைகளைக் குறிப்பிட்டு சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்)

04.1 கல்வித் தகைமைகள்

i. பெற்றுள்ள பட்டம் : ..........................................................................................................

ii. பட்டப்படிப்பில் பயின்ற பாடங்கள் : ................................................................................

iii. பல்கலைக்கழகம் : ..............................................................................................................

iv. பெற்றுக்கொண்ட சித்தி :....................................................................................................

v. பட்டச்சான்றிதழின் நடைமுறைத் திகதி : ..........................................................................

04.2 அனுபவம்

| நிறுவனத்தின் பெயர் ( அரசாங்க/மாகாணஅரசாங்க/ நியதிச் சட்ட சபை/ தனியார் நிறுவனம்) | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|
| | | |

............................................................................................................................................ ஆகிய என்னால் இவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என கண்டுபிடிக்கப்பட்டால் மேல் மாகாண அரசாங்க சேவையில் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு எனக்குள்ள உரிமையினைப் புறக்கணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இயலும் என்பதை நான் நன்கறிவேன்.

திகதி…………..........          கையொப்பம் ……………………………….

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி......................................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும், அவர் .................................. ஆந் தேதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

…………………………...…………………....

கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கைஒப்பம்

பதவி முத்திரை

திகதி : ………………………………..

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ………………………………

பதவி மற்றும் முகவரி : ……………………………….

அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் (ரூ.240,360.00 இற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர் ஒருவரினால் இது அத்தாட்சிப்படுத்தப்பட முடியும்.)

12. **அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கான நிறுவனத் தலைவரின் அத்தாட்சி**

( பொருத்தமற்ற சொற்களை வெட்டி நீக்குக)

திரு./திருமதி/செல்வி....................................................,அமைச்சில்/அலுவலகத்தில்/ தாபனத்தில் .................................................................. ஆக (பதவி) நிரந்தர அடிப்படையில் ஓய்வூதியமுடைய பதவியில் கடமையாற்றுகிறார் எனவும் ஒழுக்காறு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளும் எதிர்பார்ப்பில்லை எனவும், மேற்குறித்த தகவல்கள் உண்மையானவை எனவும் இப்பரீட்சை முடிவுகளின்படி அவர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் பரிந்துரை செய்கிறேன்.

………………………….....................................

திணைக்களத்/தலைவரின் /ஒப்பமும்

பதவி முத்திரையும்

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ………………………………

பதவி : ……………………………….

முகவரி : …………………………………...

திகதி : …………………………………

02 - 212

# பரீட்சைகளும் பகீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரசாங்க சேவையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் – 2020 (திறந்த)

மேல் மாகாண அரசாங்க சேவையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்ப) சேவை வகையின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவியில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகுதிகளையுடைய மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பள அளவுத் திட்டம்**

சம்பளத்திட்டம் MN 3 – 2016 ஆவதுடன் இப்பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு அ.நி.சு.நி. 03/2016 இற்கேற்ப ரூபா. 31,040 – 10 X 445 – 11 X 660 – 10 X 730 – 10 X 750 – 57,550/- ஆகும். அச்சுற்றறிக்கையின் அட்டவணை **II** இல் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படும்.

**03. சேவை நிபந்தனைகள்**

I. இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.
II. இப்பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையோர் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டு இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.
III. பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மற்றும் பதவியுயர்த்தும் நடைமுறையில் காட்டப்பட்டுள்ளபடி வினைத்திறன் தடை தாண்டல் மற்றும் அரசகரும மொழித் தேர்ச்சி பரீட்சைகளில் சித்தியெய்தலவசியம்.

IV. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது தாபனவிதிக் கோவைக்கும், மேல் மாகாண அரசாங்க சேவையின் செயற் படிமுறை விதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண சபையினது நிதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண ஆளுநரினால் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் வேறு ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகளுக்கும், அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படல் வேண்டும்.

**04. வெற்றிடங்கள் நிலவும் துறைகள்**

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவியில் 18 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இப்பதவியின் வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிடமே உள்ளது.

04.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2020.03.06 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் 2020.03.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்.

**05. தகைமைகள்**

**5.1 கல்வித் தகைமைகள்**

i. சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதத்துடன் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் ஒரே தடவையில் (சாதாரணப் பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.)

**5.2 உடற் தகுதிகள்**

எல்லா விண்ணப்பதாரிகளும் மேல் மாகாணத்தினுள் எப்பிரதேசத்திலாயினும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.

**5.3 வேறு தகுதிகள்**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்.

II. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்.

III. இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகுதிகளையும் 2020.03.06 ஆம் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் அவசியம்.

**5.4 தொழிற் தகைமைகள்**

I. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் உயர் கணக்கீடு தொடர்பான 01 வருட டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

II. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் உயர் கணக்காய்வு தொடர்பான 01 வருட டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

III. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் உயர் முகாமைத்துவம் தொடர்பான 01 வருட டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

IV. கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர் நிறுவனத்தின் (AAT ) இறுதிக் மட்டத் தேர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

V. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் 01 வருட கணக்கீடு தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

VI. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் 01 வருட முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

VII. தேசிய உயர் தொழிநுட்ப கல்லூரியிலிருந்து கணக்கீடு தொடர்பான 04 வருட உயர் டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

VIII. தேசிய உயர் தொழிநுட்ப கல்லூரியிலிருந்து வணிக நிர்வாகம் தொடர்பான 03 வருட உயர் டிப்ளோமா சித்தியடைந்திருத்தல்.

அல்லது

IX. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

X. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கணக்கீடு தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

XI. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் வணிகவியல் தொடர்பான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

**06. வயதெல்லை**

ஆகக்குறைந்தது 18 வருடங்கள் ஆகக்கூடியது 30 வருடங்கள் (தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**07. பரீட்சை தொடர்பான விபரம்**

| வினாத்தாள் | காலம் | புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2.பொது அறிவு மற்றும் விடய அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

**08. பரீட்சைக்குரிய பாடத்திட்டம்**

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனை, பகுத்தாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை அளவிடுவதற்காக 50 பல் தேர்வு வினாக்கள் மற்றும் சிறு வினாக்களைக் கொண்டதாகும். |
| 2. பொது அறிவு மற்றும் விடய அறிவு | (அ) தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதார மற்றும் அரசியல் அறிவு<br>(ஆ) கூட்டுறவுத் தத்துவம் மற்றும் வணிகம் தொடர்பான அறிவு<br>50 பல் தேர்வு வினாக்கள் மற்றும் சிறு வினாக்கள். |

**09. பரீட்சைக் கட்டணம்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ.600.00 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல் மாகாணத்திலமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். அதன் நிழற் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும். இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்திற்காகவும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளளிக்கப்படமாட்டாது. முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**10. விண்ணப்பிக்கும் முறை**

I. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 03 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 04 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். உரிய மாதிரியுடன் பொருந்தாத, உரிய திகதிக்கு முன் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத பூர்த்தியற்ற நிலையிலுள்ள விண்ணப்பங்கள், அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயரினை சிங்களமொழி விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ்மொழி விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

III. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020.03.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு “செயலாளர், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு, இலக்கம் 628, 10ஆவது மாடி, ஜனஜய சிட்டி கட்டிடம், நாவல வீதி, இராஜகிரிய” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “மேல் மாகாண அரசாங்க சேவையில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை – 2020” எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. குறிப்பிடப்பட்ட தினத்தின் பின்னர் கிடைக்கும் மற்றும் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

IV. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 07 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி, பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி, விண்ணப்பப்பத்திரத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டுடன் உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் பரீட்சையின் பெயர் ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட்டு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் விசாரித்தல் அவசியம்.

V. விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், (ரூ.498,960. 00 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர்),பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, வேறு மதத்தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது கருதத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் மதகுரு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஆகியோரில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும்.

**11. பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். மேலும் அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்பட நேரிடும்.

**12. விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ் வருவனவற்றிலொன்றை சமர்ப்பிக்கலாம் :

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை ;
II. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**13. தவறான தகவல்களை சமர்ப்பித்தல் :**

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின், பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு. இது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை செயற்படிமுறை ஒழுங்கு விதிக்கோவையின் 47 ஆவது பிரிவின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14. பரீட்சை முறை :**

I விண்ணப்பதாரியொருவர் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
II இப்பரீட்சையானது அறிவிக்கப்படும் எதிர்வரும் ஒரு நாளில் நடாத்தப்படும்.

**15. ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் மொத்தப்புள்ளிகளின் தகைமை வரிசைப்படி பொதுவான நேர்முகத்தேர்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகத்தேர்வில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பதவிக்கு இணைத்துக் கொள்ளல் தொடர்பான அடிப்படைத் தகுதிகள் மற்றும் உடற்தகுதிகளை உறுதிப்படுத்துதல் மாத்திரமே இடம்பெறும்.

16. இப்பரீட்சையில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகள் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

17. இவ்விண்ணப்பங் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/ உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

18. அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாக குறிப்பிட்டு, இவ்வறிவித்தலுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பம் தொலைதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையொன்றை வழங்குதல் அவர் இப்பதவிக்கான தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா எனப் பரீட்சிக்கும் வேளையில், உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

19. இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

